1981 பிப்ரவரி 10]

கொடுத்தும் இன்றுவரை ஒன்றும் நடைபெறாமல் இருக்கிறது என்பதும் அரசுக்குத் தெரியுமா, அதனைத் தீர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த பூமிதான இயக்கத்தின் நோக்கமே, நிலங்களை, ஏழைகள், இல்லாதவர்களுக்குக் கொடுப்பது என்பது மட்டுமல்ல. அதே நேரத்திலே வங்கிகளிடமிருந்தும், சங்கங்களிடமிருந்தும் கடன் பெற்று, அந்த நிலத்தைச் சீர்படுத்த வேண்டும். அதன்மூலமாக விவசாயம் செய்ய ஏற்புடையதாக ஆக்கி, கடன் தொகை வாங்கிக் கொடுக்கப்படுகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல அப்படிப்பட்ட நிலைமைகள் உருவாக்கப்படவில்லையென்றால், நிலைமைகள் சீர்திருத்தப்படும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்கு சுமார் 9,000 பேர்களுக்கு நிலம் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். ஆளுக்கு எவ்வளவு நிலம் கொடுத்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே; ஒவ்வொருவருக்கும் ஆளுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தனியாக 9,000 பேருக்கும் சொல்ல வேண்டுமென்றால், பட்டியல் பெரிதாக இருக்கும். சராசரியாக, 1 ஏக்கர் 2 ஏக்கர் என்ற அளவில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பாலாற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 270—திரு. இல. பலராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆம்பூர் நகரிலிருந்து பேரணாம்பட்டு செல்லும் நெடுஞ்சாலையில் பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இல்லை.

திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேம்பாலம் அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் இன்றியமையாத தேவையாகும். அது நீண்ட நாள் கோரிக்கையாகவும் இருந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்தபொழுது,

பொதுமக்கள் வரவேற்பிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டார்கள். அமைச்சர் அவர்களும் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். இப்பொழுது அந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்துக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையிலேயே இடம் பெறச்செய்து நிறைவேற்ற அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் மிக முக்கியமான பாலம் என்பதை ஒத்துக்கொள்கிறேன். இது அரசு மாவட்டப் பெருஞ்சாலையிலே அமைந்திருக்கக்கூடிய திட்டம். அதற்காக ஏறத்தாழ ரூ. 70 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது நிதிநிலை சரியில்லாத காரணத்தால்தான் இந்தத் திட்டம் உடனடியாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆனாலும், முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு உடனடியாக எடுக்க முடியுமா என்பது கண்டிப்பாகப் பரிசீலனை செய்யப்படும்.

அர்ஜுனா நதியின் குறுக்கே பாலம்

***வினா எண் 271—திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிவகாசிக்கு அருகிலுள்ள அர்ஜுனா நதியின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) & (இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தில் இந்தப் பாலத்தில் ஒரு பஸ் அடித்துச் செல்லப்பட்டு 46 குழந்தைகள் மாண்டுவிட்டதும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அந்த இடத்தைப் பார்வையிட்டு நிவாரணத் தொகை வழங்க உத்தரவிட்டதும் தெரிந்ததே.

மீண்டும் இதுபோன்ற கோர சம்பவம் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு, அந்த இடத்தில் உயரமான பாலம் அமைத்திட இந்த நிதி ஆண்டிலாவது அரசு உத்தரவிடுமா?